செய்தி வெளியீடு **நாள் : 13.10.2025**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு.

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.10.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில், சென்னை, தீவுத்திடலில் கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய **கண்காட்சி மையம்**, அதனைத் தொடர்ந்து திரு.வி.க. நகர் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் கட்டடப்பட்டு வரும் **புதிய சமுதாய நலக்கூடம்**, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், படவேட்டம்மன் கோயில் தெருவில் கட்டப்பட்டு வரும் **மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி** மற்றும் செல்லப்பா தெருவில் கட்டப்பட்டு வரும் **நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின்** முன்னேற்றப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மைச் செயல் அலுவலர் திரு.சிவஞானம், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், திரு.பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு, உதவி செயற்பொறியாளர் முனைவர் அ.காந்திமதி, மாநகராட்சி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™